உ

சிவமயம்

கந்தரோடை - வுற்றாக்கை

அருள்மிகு விசாலாட்சி அம்பாள் உடனுறை

விஸ்வநாதசுவாமி

# திருப்பள்ளியெழுச்சி



ஆக்கம்

சி. சிவசரவணபவன் (சிற்பி)

2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரோடை – வற்றாக்கை

# அருள்மிகு விசாலாட்சி அம்பாள் உடனுறை விஸ்வநாத சுவாமி

# திருப்பள்ளியெழுச்சி

## காப்பு

அருள் கொழிக்கும் வற்றாக்கை அம்பாளோ டப்பன்
இருள் விலக்கி இவ்வுலகோர்க் கெல்லாம் – வரந்தரவே
பள்ளி எழுகவெனப் பைந்தமிழ்ப்பா நான்பாட
வள்ளல் கணபதியே வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுக உரை

ஆதி கந்தரோடையில், வற்றாக்கைப் பதியில் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் விசாலாட்சி அம்பாள் உடனுறை விஸ்வநாத சுவாமி மீது ஸ்ரீ சிற்பி சிவசரவணபவன் பாடிய திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களில் தத்துவக் கருத்துக்களும் பக்திச் சுவையும் நிறைந்துள்ளன. திருப்பெருந்துறையுறை சிவபெருமான் மீது, அப்பெருமானின் பேரருளால் மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி பாடியதை அனைவரும் அறிவர். எங்கள் குலதெய்வமாய் விளங்கும் விஸ்வநாதப் பெருமானிடம் கொண்டுள்ள ஆழ்ந்த பக்தி காரணமாகவே சிற்பி அவர்களால் மிகச் சிறப்பாக இப்பாடல்களைப் பாட முடிந்தது என்பது என் நம்பிக்கை.

சென்னை திருவள்ளுவர் நகரில் வாழ்பவர், இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களின் பிரதம சீடரும் "இசை ஏடு" ஆசிரியருமான சங்கீத பூஷணம் ப. முத்துக்குமாரசாமி சர்மா. தன் இசைப்பணிக்காக ஏழிசைச் செல்வன், பெரும்பாண்நம்பி, தமிழிசைக் கலாபாரதி, இசைச்செல்வம் போன்ற பட்டங்களைப் பெற்ற இவர், சிற்பி அவர்களின் நெருங்கிய உறவினர்; நண்பர்; தன் இளமைக் காலத்தில் ஒன்பது ஆண்டுகள் கந்தரோடையில் வாழ்ந்து கல்வி கற்றவர்; சிற்பி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்பாடல்களுக்கு இசையமைத்து, நாதஸ்வர, வயலின், மிருதங்க இசைப் பின்னணியுடன் பாடி இறுவட்டு மூலம் எமக்களித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன மகிழ்ச்சியையும் எழுச்சியையும் ஊட்டும் இராகங்களில் அதிகாலை வேளையில் ஒலிபரப்பாகும் இப்பாடல்கள் எம்மவர் உள்ளங்களிற் பக்தியுணர்வைக் கிளர்ந்தெழச் செய்யும் என்பது திண்ணம். இந்த அரிய தொண்டினைச் செய்த சிற்பி அவர்கட்கும் சங்கீத பூஷணம் ப. முத்துக்குமாரசாமி சர்மா அவர்கட்கும் எல்லாம் வல்ல விசாலாட்சி அம்பாள் உடனுறை விஸ்வநாதப் பெருமான் நீண்ட ஆயுளையும் மகிழ்ச்சியையும் அளித்து இத்தகைய தெய்வீகப் பணியில் மேலும் ஈடுபடச் செய்வாராக.

இப் பாடல்களை அச்சிடுவித்து அன்பர்கள் அனைவருக்கும் வழங்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க

58 பத்திரிகையாளர் குடியிருப்பு
திருவான்மியூர்
சென்னை – 41

கனக புவனேந்திரநாதன்
ஓய்வு நிலை அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமிழ்ப்பக்தி மரபு கடவுளுக்கும் பக்தனுக்குமுள்ள உறவை மானிட உறவின் அடிப்படையில் நோக்கும். மனிதன் உறவினரோடு கூடி வாழுதல் போல, கடவுளரிடையும் தேவியர், புதல்வர், மாமன் மாமியர் ஆகிய உறவுகளைக் கற்பித்து வணங்குவது இந்து மதத்தின் நடை முறை.

கடவுளுக்கு அமுது படைப்பதும், முழுக்காட்டுவதும், திருக்கல்யாணம் செய்து பார்ப்பதும், பள்ளியறைக்கு எழுந்தருளப் பண்ணுவதும் காலையில் திருப்பள்ளியெழுச்சி பாடுவதும் பக்தர்களுக்கு உவப்பானவை.

இறைவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடியோர் இருவர்; தொண்டரடிப் பொடியாழ்வார், மாணிக்கவாசகர்.

"கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ!
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்
ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிற(கு) உதறி..........."

எனத் திருவரங்கனைத் துயிலெழுப்பும் இப்பாட்டு தேனாய் இனிக்கிறது.

கடவுளுக்குப் பள்ளியெழுச்சி பாடும் இம்மரபை மாற்றிப் புரட்சி செய்தவன் பாரதி. பாரத மாதாவுக்குப் பள்ளியெழுச்சி பாடினான் அவன்:

"தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்(கு) இங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிதுயில் கின்றனை இன்னுமெம் தாயே
வியப்பிது காண்பள்ளி எழுந்தரு ளாயே!

கந்தரோடை அருள்மிகு விசாலாட்சி அம்பாள் உடனுறை விஸ்வநாத சுவாமி மீது 'சிற்பி' சிவ சரவணபவன் அவர்கள் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார்.

முன் குறிப்பிட்ட அருளாளர்களை அடியொற்றி அம்மரபைப் பேணி – இப்பனுவலைப் படைத்திருக்கிறார் சிற்பி.

"குணதிசை வானிலே குங்குமப் பிழம்பாய்
குவலயம் விழித்தெழக் கொழித்தனன் கதிரோன்"

என்றும்

"பூவிரி சோலைகள் புதுமணம் பரப்பும்
பூங்குயிலினங்கள் பூபாளம் பாடும்....."

என்றும் சூரியோதயத்தைப் பாடுகிறார் கவிஞர்.

பழம்பதியாம் கந்தரோடையில் அமைந்துள்ள வற்றாக்கை என்னும் குறிச்சியிலேதான் விஸ்வநாதர் கோயில் கொண்டருளியுள்ளார். வழுக்கையாறு வளஞ்சேர்க்கும் வற்றாக்கையைப் பத்துத் திருப்பாக்களிலும் பொறித்துள்ளது தனிச்சிறப்பு.

மாலும் அயனும் அறியாவண்ணம் பேரொளிப்பிழம்பாய் ஓங்கியமை, ஆலமே அமுதமாக உண்டு அமரரைக் காத்தமை ஆகிய அருட்செயல்கள் இப்பள்ளியெழுச்சியில் போற்றப்படுகின்றன.

அடியார்களைச் சிவமாகவே பாவித்துத் தொண்டு செய்வதும் தொழுவதும் சைவசமயத்தின் முக்கிய கொள்கை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம். இப்பனுவலில் பரமன் சுந்தரர்க்காகத் தூது போனதும், வந்திக்காகப் பிட்டுக்கு மண் சுமந்ததும், ஆளுடைய பிள்ளைக்கு ஞானப் பாலூட்டியதும், அப்பரைச் சூலை நோய் கொடுத்து ஆட்கொண்டதும் பேசப்படுகின்றன.

வற்றாக்கையில் கோயில் கொண்டருளிய பெருமானைத் துதிக்கும் துறவியர் பற்றியும், பாடற்றொண்டு செய்யும் இசைவாணர் பற்றியும், திருப்புகழ் இசைக்கும் சிறுவர் சிறுமியர் பற்றியும் பதிவு செய்யும் இப்பனுவல், கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட தமிழ் மன்னரையும் குறிப்பிடத்தவறவில்லை.

இத்திருப்பள்ளியெழுச்சி இறுவட்டாக வெளிவருவது மகிழ்ச்சி தருகிறது. ஈழத்தில் நெடுங்காலம் இசைப்பணி செய்து தம் புகழ் நிறுவி தற்பொழுது தமிழ்நாட்டில் வசிக்கும் திரு. ப. முத்துக்குமாரசாமி இதற்கு இசையமைத்துப் பாடியுள்ளார். அருமையான ஜனரஞ்சகமான ராகங்களைக்கொண்டு ஓர் இசை மாலையாகக் கோத்து இதைத் தந்துள்ளார் அவர்.

மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது. இப்பள்ளியெழுச்சி பாடிய 'சிற்பி ' அவர்களுக்கு விஸ்வநாதப்பெருமான் திருவருள் முற்றும் கிடைப்பதாக!

சோ. பத்மநாதன்

"ஏரகம்"
பொற்பதி,
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கியோன் உரை

இலங்கைத் தமிழ் மக்களின் நீண்ட வரலாற்றிலே எமது ஊராகிய கந்தரோடைக்குச் சிறப்பிடம் உண்டு. மாவிட்டபுரத் திருத்தலத்துடன் தொடர்புடைய மாருதப்புரவல்லி என்ற சோழ இளவரசியைத் திருமணம் செய்த உக்கிரசிங்க மன்னன், கந்தரோடையைத் தலைநகரமாகக் கொண்டுதான் ஆட்சி செய்தான். இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மிகப் பழங்காலத்திலேயே சைவத்தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்ததை உறுதிப்படுத்துகின்றன.

கந்தரோடை – வற்றாக்கைப் பதியில் எழுந்தருளியுள்ள விசாலாட்சி அம்பாள் உடனுறை விஸ்வநாதப் பெருமான் எங்கள் குலதெய்வம். அப் பெருமான் பேரில் திருப்பள்ளியெழுச்சி பாட வேண்டும் என்ற என் நீண்ட நாள் ஆசை அவனருளால் நிறைவேறியுள்ளது.

திரு. கனக. புவனேந்திரநாதன் அவர்களின் விருப்பம், முயற்சி, ஆதரவு காரணமாக, திருப்பள்ளியெழுச்சி நூலுருப் பெற்றுள்ளது. கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பதில் அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற அவர், இப்போது சென்னையில் வாழ்கின்றார்; "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித்" திருமுறைகளைப் பாடுவதைத் தன் பணியாகக் கொண்டுள்ளவர். அறிமுக உரையையும் அவரே எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலி ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அதிபராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற கவிஞர் திரு. சோ. பத்மநாதன் அருமையான ஓர் அணிந்துரையை எழுதியிருக்கிறார். மரபுக்கவிதை புதுக்கவிதை ஆகியவற்றிலே சம ஆற்றல் பெற்று, ஈழத்தின் முன்னணிக் கவிஞராகத் திகழ்பவர் அவர்.

சங்கீதபூஷணம் பிரம்மஸ்ரீ ப. முத்துக்குமாரசாமி சர்மா என் உறவினர்; கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் என்னுடன் சேர்ந்து கல்வி கற்றவர். இப்போது சென்னை வாசியாகி "நாளும் இன்னிசையால் நற்றமிழ்" வளர்த்து வருபவர். திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களுக்குப் பொருத்தமான இராகங்களிலே சிறப்பாக இசையமைத்துப் "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடி" இறுவட்டிற் பதிவு செய்துள்ளார்.

விசாலாட்சி அம்பாள் உடனுறை விஸ்வநாதப் பெருமானின் பேரருள் இவர்கள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சி. சிவசரவணபவன்

கந்தரோடை,
சுன்னாகம்.
05.12.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரோடை அருள்மிகு விசாலாட்சி அம்பாள் உடனுறை
விஸ்வநாதசுவாமி

# திருப்பள்ளியெழுச்சி

1. போற்றுவம் நின்னையெம் புண்ணிய மூர்த்தி
பொன்னொளிர் மேனியாய் புரிசடை கொண்டாய்
நாற்றிசை நின்றனர் நல்லடி யார்கள்
நாள்மலர் வேளையில் நாமலர் கின்றார்
ஆற்றுரு வாம்வழுக் கைவளம் சேர்க்கும்
ஆதிகந் தரோடை அமைந்தவற் றாக்கை
வீற்றிருந் தேவிசா லாட்சியோ டருளும்
விஸ்வநா தாபள்ளி எழுந்தரு ளாயே.

2. மாலய னறியா மலையொளிப் பிழம்பே
மருள்நிறைந் தோர்க்கென்றும் மறைந்திடும் மணியே
நூலறி வாளர்கள் நுவலுதற் கரிய
நுண்ணிய னேதனி நுதல்விழிப் பொருளே
பாலமு தருந்திய பாலனார் தந்த
பைந்தமிழ்ப் பாவிலே படர்ந்திடும் பரனே
சீலமுள் ளோரெலாஞ் சேருவற் றாக்கைச்
சிவபெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பூவிரி சோலைகள் புதுமணம் பரப்பும்
பூங்குயி லினங்கள் பூபாளம் பாடும்
ஆவினம் அன்புடன் அம்மாவென் றழைக்கும்
ஆலய மணிகளும் அசைந்தொலி யெழுப்பும்
நாவிலுன் னாயிரம் நாமங்க ளினிக்க
நல்லடி யாருளக் காட்சியில் நனைய
தேவியோ டருள்மழை பொழியும்வற் றாக்கைத்
தேனமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

4. மலவிருட் குகையினுள் மயங்குநின் னடியார்
மனதினுட் புகுந்துநன் மறையொளி காட்டி
நிலமிசை நெறியினில் நீடுற வாழ்ந்தே
நித்தமும் உன்னையே நெஞ்சினி லேற்ற
உலகினி லேயுண்மை ஒளிவழி காட்ட
ஒழுக்கமொப் புரவுட னுள்ளமு மோங்க
நலம்பல பயந்திடும் நாமவற் றாக்கை
நாயக னேபள்ளி எழுந்தரு ளாயே.

5. சுந்தரர்க் காகநீ தூதுமேற் கொண்டாய்
தோகையா ரூடலைத் தூர்த்தருள் செய்தாய்
வந்தியார் தருபிட்டை மகிழ்ந்து நீ உண்டாய்
வாதவூ ரருக்காய் வாங்கினை அடியும்
முந்து செந்தமிழரை முதல்குடி யாக்கி
முடியுடன் அரசையும் முறை முறை ஈந்த
கந்தரோ டைப்பதி காணுவற் றாக்கைக்
கண்ணுத லேபள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆலமு துண்டுமுன் னமரரைக் காத்தாய்
அமுதடி பணிபவர் அல்லலைத் தீர்ப்பாய்
சூலைநோய் தந்துபின் சொல்நா வரசைச்
சுகமுறச் செய்துநீ சிவநெறிக் கீர்த்தாய்
பாலமு தூட்டிய பாலக னார்க்குப்
பண்ணிசை பாடிடும் பக்குவ மளித்தாய்
வாலறி வானவ! வாழ்முதலே என்றும்
வற்றாக்கை யாபள்ளி எழுந்தரு ளாயே.

7. குணதிசை வானிலே குங்குமப் பிழம்பாய்க்
குவலயம் விழித்தெழக் கொழித்தனன் கதிரோன்
கணந்தொழும் கன்னியர் கந்தநீ ராடிக்
கவினுறு கோலமும் போட்டுநிற் கின்றார்.
வணங்கிடு மடியவர் வளம்பல பொலிய
வற்றாக்கைப் பதியினில் வாழ்தரு முதலே
அணங்குட னருள்புரிந் தேயெமை யாளும்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

8. துறவியர் ஞானியர் துதித்துனை யேத்த
தொல்லிசை வாணரும் தொழுதுனைப் பாட
அறுதொழி லந்தணர் அருள்வழி யாற்ற
அனுபவித் துணர்ந்தவர் அருட்டிறம் போற்ற
சிறுவர்கள் சிறுமியர் திருப்புகழ் இசைக்க
செந்தமிழ் வல்லுனர் சேவைகள் போற்ற
நறுங்கவி ஒலித்திடும் நாமவற் றாக்கை
நல்லமு தேபள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. திருவெம்பா வையும் கோவையும் பாடத்
திருவாத வூரர்க்குத் தேன்குரல் கொடுத்தாய்
திருநாவுக் கரசர்க்குத் திருப்பாதம் காட்டித்
திருவுடை வேடன்முன் சிவலிங்க மானாய்
அருவம் உருவம் அருவுரு என்றே
அத்தனை நிலையிலும் அருள்புரி வோனே
கருணையங் கடலே கனகவற் றாக்கைக்
கற்பக மேபள்ளி எழுந்தரு ளாயே.

10. மண்ணவர் உன்னருட் பெருமையில் மகிழ
வயலுடை உழவர்கள் வாழைகள் நாட்ட
தொண்டர்கள் சேர்ந்தொன்றாய்த் திருவிளக் கேற்றித்
தூமலர் மாலைகள் தொடுத்தலங் கரித்தே
கண்டனம் கண்ணுதற் கடவுளையென்றே
கண்மலர் சிந்தித்தம் கைமலர் கூப்ப
தண்ணறுஞ் சோலைகள் தழைக்கும்வற் றாக்கைத்
தனிமுத லேபள்ளி எழுந்தரு ளாயே.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரோடை,
சுன்னாகம்.
05.12.2009

அன்புடையீர்,

வணக்கம். எங்கள் குலதெய்வமாகிய அருள்மிகு விசாலாட்சி அம்பாள் உடனுறை விஸ்வநாதசுவாமி மீது நான் யாத்த திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் என்ற இந்தச் சிறு நூலை திரு. கனகபுவனேந்திரநாதன் அவர்கள் கேட்டுக்கொண்டபடி உங்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். பாடல்கள் பதிவு செய்யப்பெற்ற இறுவட்டு ஒன்றின் விலை ரூபா 100/= மட்டுமே. விரும்பியோர் கீழ்க்கண்டவர்களிடம் வாங்கலாம்.

1) பிரம்மஸ்ரீ க. சிவானந்தசர்மா, விஸ்வநாதசுவாமி கோவில், கந்தரோடை.
2) உரிமையாளர், யோகாஸ் தொலைத்தொடர்பு நிலையம் கந்தரோடை.

இறுவட்டு விற்பனை மூலம் கிடைக்கும் மேலதிக வருமானம் கோவில் திருப்பணி நிதியிற் சேர்க்கப்படும்.

வணக்கம்

பணிவுள்ள
சி. சிவசரவணபவன்
(சிற்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான

கணனி அச்சு வேலைகள் யாவும்

சிறந்த முறையில்

அச்சிட்டு குறித்த தவணையில்

பெற்றுக்கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்

# கிருஷ்ணா பிறிண்டேர்ஸ்

*Dr.* சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

(அந்தோனியார் கோயிலுக்கு அருகில்)

*Krishna Printers, Chunnakam.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org